# சங்கரன்கோவில் நகராட்சி

2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20.09.2024-ம் தேதி வெள்ளிக்கிழமை **நண்பகல்** 12.30 மணிக்கு நடைபெற உள்ள நகர்மன்ற அவசரக்கூட்ட நிகழ்ச்சி நிரல்:-

பொருள் எண் – 1

சங்கரன்கோவில் நகராட்சி, 24வது வார்டு தெற்குரத வீதி தபசு நகர் மேற்கு பகுதியில் தெற்கு தெரு மற்றும் ஆதிசங்கர விநாயகர் கோவில் தெருக்களில் மின்கம்பங்கள் இல்லை. ஆதலால், புதியதாக மூன்று மின்கம்பங்கள் நிறுவி மின்விளக்கு அமைக்க அவசியம் ஏற்பட்டுள்ளது. இதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் – 2

சங்கரன்கோவில் நகராட்சி, 19வது வார்டு திருவேங்கடம் சாலை – திருவள்ளுவர் சாலை சந்திப்பில் பிரதான சாலையிலிருந்து பள்ளமாக உள்ளதை சரிசெய்தல் மற்றும் வடகாசியம்மன் கோவில் 1ம் தெரு, வடகாசியம்மன் கோவில் 2ம் தெரு மற்றும் மாதாங்கோவில் தெருக்களில் உள்ள ஆறு (6) சந்துகளின் சாலைகளில் மேடுபள்ளங்களை சரிசெய்ய பராமரிப்பு பணி மேற்கொள்ள அவசியம் ஏற்பட்டுள்ளது. இதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் – 3

சங்கரன்கோவில் நகராட்சி, 10வது வார்டில் கீழ்கண்ட பணிகள் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | கோமதியாபுரம் 3ம் தெருவில் பழுதடைந்துள்ள தண்ணீர் தொட்டியினை அகற்றி புதிய தண்ணீர் தொட்டி அமைத்தல் பணி | 7.00 |
| 2. | கோமதியாபுரம் 3ம் தெரு - கோமதியாபுரம் 2ம் தெருவிலுள்ள பழுதடைந்துள்ள சிறுபாலத்தை சீரமைத்தல் மற்றும் கோமதியாபுரம் 2ம் தெரு மேல் பகுதியில் இரண்டு பக்கமும் புதிய மழைநீர் வடிகால் அமைத்தல் பணி | 9.00 |
| மொத்தம் | | 16.00 |

மேற்காணும் பணிகளுக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.16.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் – 4

சங்கரன்கோவில் நகராட்சி, 11வது வார்டில் கீழ்கண்ட பணிகள் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | இராமசாமியாபுரம் 3ம் தெரு மேல்பகுதியில் ஆழ்துளைகிணறு, நீர்த்தேக்கதொட்டி மற்றும் மோட்டார் அறை அமைத்தல் பணி | 3.00 |
| 2. | இராசாமியாபுரம் 2ம் தெருவில் ஆழ்துளைகிணறு, நீர்த்தேக்கதொட்டி மற்றும் மோட்டார் அறை அமைத்தல் பணி | 2.00 |
| 3. | இராமசாமியாபுரம் 3ம் தெரு மத்திய பகுதியில் பழுதடைந்துள்ள அடிபம்பு மற்றும் ஆழ்துளை கிணற்றை சரிசெய்து புதிய அடிபம்பு அமைத்தல் பணி | 0.50 |
| 4. | இராமசாமியாபுரம் 2ம் தெரு பிள்ளையார் கோவில் எதிர்புறத்தில் உள்ள பகுதிக்கு பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி | 4.00 |
| மொத்தம் | | 9.50 |

மேற்காணும் பணிகளுக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் – 5

சங்கரன்கோவில் நகராட்சி, 07வது வார்டில் கீழ்கண்ட பணிகள் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | லட்சுமியாபுரம் 7ம் தெரு கீழ்பகுதியில் பழுதடைந்துள்ள சிறுபாலத்தை அகற்றிவிட்டு புதிய சிறுபாலம் அமைத்தல் பணி | 5.00 |
| 2. | பாரதியார் 3ம் தெருவில் பழுதடைந்துள்ள சிறுபாலத்தை அகற்றிவிட்டு புதிய சிறுபாலம் அமைத்தல் பணி | |
| மொத்தம் | | 5.00 |

இதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் – 6

சங்கரன்கோவில் நகராட்சியில் திருவேங்கடம் சாலையில் நகராட்சி அலுவலகம் அருகில் மேற்புரமாக நகராட்சிக்குச் சொந்தமான இரண்டு கிடங்கு கட்டடங்களை தலா 440 ச.மீட்டர் பரப்பளவு கொண்டவை மற்றும் கழிப்பிட வசதியுடன் குத்தகை அடிப்படையில் மாத வாடகைக்கு பொது ஏல முறையில் ஏலம் விட நகர்மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் – 7

சங்கரன்கோவில் நகராட்சியில் பழைய பேருந்து நிலையம், பழைய நகராட்சி அலுவலகம் மற்றும் பழைய தினசரி காய்கறி நாளங்காடி ஆகிய கட்டடங்களை இடித்து அப்புறப்படுத்தியதில் கழற்றப்பட்ட இரும்பு மற்றும் மர தளவாட சாமான்கள் பட்டியலில் கண்டுள்ளவாறு E-Auction முறையில் கழிவு செய்ய நகர்மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் – 8

சங்கரன்கோவில் நகராட்சியில் குடிநீர் பிரிவில் நான்கு மேல்நிலை நீர்த்தேக்கங்களில் Secondary Chlorination செய்ய நான்கு Chlorination Plant விநியோகம் செய்து பொருத்திக் கொடுக்கவும் மூன்றாண்டுகளுக்கு இயக்கி ஆண்டுப் பராமரிப்பு செய்யவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.27.00 இலட்சத்திற்கு நகர்மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் – 9

சங்கரன்கோவில் நகராட்சியில் குடிநீர் பிரிவில் குடிநீர் பிரிவில் பெறப்படும் குடிநீரினை Secondary Chlorination முறையில் Disinfectant Treatment சுத்திகரிப்பு செய்யத் தேவைப்படும் குளோரின் வாயு 100kg கொள்ளளவு சிலிண்டருடன் வாடகை அடிப்படையில் ஓராண்டிற்கு விநியோகம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.50 இலட்சத்திற்கு நகர்மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் – 10

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை 28 அவர்களின் ந.க.எண்27968/2022/P1, நாள்.29.11.2023 மற்றும் 09.01.2024 ஆகிய கடிதங்களில் நகராட்சிகளில் புதியதாக அமைக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையங்களுக்கு வரும் போட்டி தேர்வாளர்களுக்கு தேர்வுகளுக்கு தேவையான ஆலோசனைகள் வழங்க ஏதுவாக வழிகாட்டி ஒருநபரை ஒய்வுபெற்ற பேரசிரியர், ஆசிரியர்கள், பொதுசேவர்கள் நிலையில் ஆலோசர்கள் நியமனம் செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் சங்கரன்கோவில் நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021-2022-ன் கீழ் கழுகுமலை – திருவேங்கடம் இணைப்பு சாலையில் அமைக்கப்பட்டுள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு தற்காலிகமாக வழிகாட்டி ஒருவரை நியமனம் செய்யவும், அவருக்கான ஊதியமாகா மேற்படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28, அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு மாதம் ஒன்றுக்கு ரூ.5000/- வழங்கவும், அதற்கான ஆறு மாதத்திற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.30,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு வழிகாட்டி ஒருவர் நியமனம் செய்யப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. மேற்படி, நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு நியமனம் செய்யப்பட்ட வழிகாட்டி அவர்களுக்கு ஊதியம் வழங்கும் செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது**